# தமிழ்

## தாள்—I

## (இலக்கியம்)

| காலஅளவு : மூன்று மணி நேரம் | மொத்த மதிப்பெண்கள் : 250 |
|---|---|

### வினாத்தாள் குறித்த அறிவுறுத்தல்கள்

**வினாக்களுக்கு விடை எழுதத் தொடங்கும்முன் பின்வரும் அறிவுறுத்தல் ஒவ்வொன்றையும் கவனமாகப் படிக்கவும்:**

இரண்டு பிரிவுகளாகப் பகுத்து மொத்தத்தில் எட்டு வினாக்கள் தரப்பட்டுள்ளன.

அவற்றுள் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க வேண்டும்.

**1**, **5** ஆகிய வினாக்களுக்குக் கட்டாயம் விடையளிக்க வேண்டும்; எஞ்சிய வினாக்களுள் பகுதி ஒவ்வொன்றிலும் குறைந்தது ஒரு வினாவைத் தெரிவு செய்து விடையளிக்க வேண்டும். இரண்டு பகுதிகளிலும் சேர்த்து மொத்தத்தில் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க வேண்டும்.

ஒவ்வொரு வினா மற்றும் பகுதிகளுக்குரிய மதிப்பெண்கள் அவற்றுக்கு நேரே கொடுக்கப்பட்டுள்ளன.

விடைகளைக் கட்டாயம் தமிழில் மட்டுமே எழுத வேண்டும்.

வினாக்களுக்கு நேரே கொடுக்கப்பட்டுள்ள விடைதரும் சொற்களின் எண்ணிக்கை வரம்பைக் கட்டாயம் பின்பற்ற வேண்டும்.

விடையளிக்கப்பட்ட வினாக்கள் வரிசை முறையில் கணக்கிடப்படும். ஒரு வினாவிற்கு ஒரு பகுதி மட்டும் விடை எழுதப்பட்ட நிலையில் எஞ்சிய பகுதி அடிக்கப்படாமல் இருந்தால் அப்பகுதியிலிருக்கும் அடிக்கப்படாத பக்கமும் விடைப் பக்கமாகக் கருதிக் கணக்கிடப்படும். ஆகவே வினா-விடைப் புத்தகத்தில் வெறுமையாக விடப்பட்ட பக்கம் அல்லது பக்கத்தின் பகுதிகளைத் தெளிவாக அடித்துவிட வேண்டும்.

# TAMIL

## PAPER—I

## ( LITERATURE )

| Time Allowed : Three Hours | Maximum Marks : 250 |
|---|---|

### QUESTION PAPER SPECIFIC INSTRUCTIONS

**Please read each of the following instructions carefully before attempting questions**

There are EIGHT questions divided in two Sections.

Candidate has to attempt FIVE questions in all.

Question Nos. **1** and **5** are compulsory and out of the remaining, THREE are to be attempted choosing at least ONE question from each Sections.

The number of marks carried by a question/part is indicated against it.

Answers must be written in TAMIL.

Word limit in questions, wherever specified, should be adhered to.

Attempts of questions shall be counted in sequential order. Unless struck off, attempt of a question shall be counted even if attempted partly. Any page or portion of the page left blank in the Question-cum-Answer Booklet must be clearly struck off.

## SECTION—A

**1.** கீழ் வரும் வினா ஒவ்வொன்றிற்கும் *150* சொற்களுக்கு மிகாமல் குறிப்பு வரைக : 10×5=50

(a) திராவிட மொழிகள்

(b) தமிழில் எதிர்மறை வினை

(c) பிற்கால நீதி நூல்கள்

(d) பரணி இலக்கியம்

(e) ஆழ்வார் பாடல்களில் உருக்காட்சி

**2.** கீழ் வரும் வினா ஒவ்வொன்றிற்கும் *250* சொற்களுக்கு மிகாமல் விடை தருக :

(a) ஒலி, சொல் நிலைகளில் சங்ககாலத் தமிழிலிருந்து பல்லவர் காலத் தமிழ் வேறுபட்டிருப்பதைச் சான்றுகளுடன் விளக்குக. 20

(b) தொல்காப்பியம் சுட்டும் இலக்கிய வகைகளை வகைப்படுத்தி ஆராய்க. 15

(c) குறவஞ்சி இலக்கியத்தின் நாடகக் கட்டமைப்பு குறித்து கட்டுரை வரைக. 15

**3.** கீழ் வரும் வினா ஒவ்வொன்றிற்கும் *250* சொற்களுக்கு மிகாமல் விடை தருக :

(a) தமிழில் அடைச்சொற்களின் பயனாக்கங்களை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக. 15

(b) சங்கப் பாக்களில் மனிதநேயச் சிந்தனைகளின் மதிப்பை ஆராய்க. 20

(c) தமிழ் உரைநடை வளர்ச்சியில் அரசியல் இயக்கங்களின் பங்களிப்பினை விவரிக்க. 15

**4.** கீழ் வரும் வினா ஒவ்வொன்றிற்கும் *250* சொற்களுக்கு மிகாமல் விடை தருக :

(a) தமிழ்ப் பெயர்ச் சொற்களை வகைப்படுத்தி விளக்குக. 15

(b) காப்பிய மீவியல் புனைவுகளின் முக்கியத்துவத்தை இரட்டைக் காப்பியங்கள் வழி நிறுவுக. 20

(c) புதுக்கவிதைகள் சமூக மாற்றத்திற்கான முற்போக்குச் சிந்தனைகளை மையப்படுத்தியுள்ள பாங்கினை ஆராய்க. 15

## SECTION—B

**5.** கீழ் வரும் தலைப்பு ஒவ்வொன்றிற்கும் *150* சொற்களுக்கு மிகாமல் குறிப்பு வரைக : 10×5=50

(a) மெய்ப்பாடு

(b) தொன்மம்

(c) மொழிபெயர்ப்பு உத்திகள்

(d) பழந்தமிழர் வழிபாட்டு முறைகள்

(e) குடைவரைக் கோயில்கள்

**6.** கீழ் வரும் வினா ஒவ்வொன்றிற்கும் *250* சொற்களுக்கு மிகாமல் விடை தருக :

*(a)* இலக்கியத் திறனாய்வின் வகைகளை விவரிக்க. 20

*(b)* ''விடுகதைகள், நாட்டார் வழக்காறுகள் மற்றும் வாழ்வியலைப் பிரதிபலிப்பன''—ஆராய்க. 15

*(c)* தமிழ் மொழி வளர்ச்சிக்கு மதங்கள் பின்புலமாக அமைந்துள்ளமையை விவரிக்க. 15

**7.** கீழ் வரும் வினா ஒவ்வொன்றிற்கும் *250* சொற்களுக்கு மிகாமல் விடை தருக :

*(a)* சமூக விழிப்புணர்வுக்கு இக்கால ஊடகங்களின் பங்கினை மதிப்பிடுக. 15

*(b)* தமிழ் நாளிதழ்களின் தோற்றம் வளர்ச்சி குறித்து விவரிக்க. 20

*(c)* ஒப்பிலக்கியக் கொள்கையை விளக்கி, இணைநிலை ஆய்வு அடிப்படையில் ஒரு தமிழ் நாவலுடன் பிறமொழி நாவல் ஒன்றினை ஒப்பிட்டு ஆராய்க. 15

**8.** கீழ் வரும் வினா ஒவ்வொன்றிற்கும் *250* சொற்களுக்கு மிகாமல் விடை தருக :

*(a)* நாயக்கர்களின் கட்டடக்கலை, கவின் கலைச் சிறப்புகளை விளக்குக. 20

*(b)* நாட்டுப்புறச் சமூகக் கதைப்பாடல்களில் சாதிய அடக்குமுறை பாடுபொருளாக்கப் பட்டுள்ளன : ஆராய்க. 15

*(c)* தொல்காப்பியம் கூறும் உள்ளுறை மற்றும் இறைச்சியைச் சங்கப்பாக்கள் வழி ஆராய்க. 15

★★★